## அன்பு பொறுமை உள்ளதா? நடைமுறையில் அப்படி இல்லை? ஏன்

**அன்பு பொறுமை உள்ளது என்று போதிக்கப்படுகிறது. ஆனால், நடைமுறையில் அப்படி இல்லையே. ஏன்?**

**- ஜோசப்**

நான் படிவம் 5 படித்த காலத்தில் ஆங்கில இலக்கியம் படித்தேன் (English Literature) படித்த போது, மெக்பெத் என்ற இலக்கிய நூல் வாசிக்க வேண்டிய சூழல் எழுந்தது. அது பழம்பெரும் ஆங்கில எழுத்தாளர் ஷெக்ஸ்பியர் எழுதிய இலக்கிய நூல். அதில் அன்பை பற்றிய ஒரு தத்துவத்தை அவர் கூறியிருந்தார். “Love is not love; love which alters it, when alteration finds” என்பதாகும். அதாவது, 'மாற்றத்தைக் கண்டு மாறும் அன்பு, அன்பல்ல' என்பதாகும்.

உண்மை அன்பு என்பது பச்சோந்தித் தன்மை உடையதல்ல. அது எந்த மாற்றத்தையும் கண்டு மாறாது. இது பற்றி தூய பவுல் கொரிந்திய திருச்சபைக்கு எழுதும் போது (1கொரி. 13:4-7) அன்பின் தன்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அன்பின் தன்மையை ஒரு பட்டியலாகத் தருகின்றார். அந்தப் பட்டியலில் அவர் முதலில் கூறியது, 'அன்பு பொறுமையுள்ளது' என்பதாகும்.

பொறுமையாக இருப்பது என்பது நாம் தொடர்ந்து இழிவாக நடத்தப்பட வழிவிடுவதோ, உடல் சார்ந்த தாக்குதல்களை சகித்துக் கொள்வதோ, பிறர் நம்மைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதோ அல்ல. மாறாக, நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நல்லவர்களாக, குறையற்றவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணிப் பழகும் போது, நாம் பிரச்சினைகளை, சவால்களைச் சந்திக்க நேரிடும். அத்தருணங்களில் நாம் பொறுமை இழக்க வேண்டியிருக்கும். இவ்வாறு நாம் எதிர்பார்ப்பவை நடக்காவிட்டால், நாம் விரும்புவது இயல்பாக நடைபெறாவிட்டால் நாம் கோபப்பட்டுக் கொண்டே இருப்போம். இதன் விளைவு, இறுதியில் நம்மால் யாருடனும் சேர்ந்து வாழ இயலாமல் நம்மை நாமே தனிப்படுத்திக் கொள்ள நேரிடும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவர்களாகக் கூட மாறிவிடுவோம்.

இதுபோன்ற சம்பவங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே நிகழ்ந்தால், குடும்பங்களும் சீர்குழைந்து போகும். குடும்பங்கள் போர்க்களங்களாக மாறிவிடும். எனவேதான், இறைவார்த்தையானது இப்படி கூறுகிறது. “மன்னிப்பு, சீற்றம், சினம் கூச்சல், பழிச்சொல், எல்லாவற்றையும் தீமை அனைத்தையும் உங்களை விட்டு நீக்குங்கள்” (எபே.4:31) என்று. யாராகிலும் நான் விரும்புவதற்கு மாறாகச் செயல்பட்டாலும் அனைவரையும் இவ்வுலகின் ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆழமான பரிவிரக்கம்தான் அன்பு. அந்த அன்பு பல நன்மைகளைக் கருத்தில் கொண்டு பொறுமை காக்கும். உறவுகள் பாதிக்கப்படக்கூடாது என்பது அன்பின் அடிப்படை போதனை.

அன்பு என்பது ஓர் உணர்வு அல்ல. அது ஓர் அர்ப்பணம். அந்த அர்ப்பணத்திற்குத் தேவை பொறுமை. நிதானம். 'மாற்றத்தைக் கண்டு மாறும் அன்பு, அன்பல்ல' எந்தச் சூழலிலும் உண்மை அன்பு மாற்றம் தேடாது. இன்று குடும்பத்திலும் சரி, உறவுகள் மத்தியிலும் சரி, சமூகத்திலும் சரி, சந்தர்ப்பச் சூழலால் வருமானத்திலோ, வேலையிலோ, பதவியிலோ மாற்றம் தோன்றும் போது அன்பு மாறுகிறது. உறவுகளில் கீரல்கள் விழுங்கின்றன. சந்தேகங்கள் தலைத்தூக்கும் போது அன்பு மாறுபடுகிறது. இதற்கு நம்மில் பொறுமை இல்லை. அன்பு பொறுமையை இழந்து விடுகிறது. அடுத்து நிகழ்வது பிளவு.

அன்பு எப்பொழுதும் வாழ்வையும் உறவையும் திடப்படுத்தும். அனைத்திலும் மனவுறுதியாய் இருக்கும். அது பொறுமையுள்ளது. இதைத்தான், தூய பவுல், 'அறிவு இறுமாப்பு அடைய செய்யும். ஆனால், அன்பு உறவை வளர்க்கும்' (கொரி. 8:1) என்று வலியுறுத்திக் கூறுகின்றார். அன்பு கொண்டு பார்ப்பதனால் நாம் பொறுமை இழக்கிறோம். அன்பு கொண்டு பார்த்தால் பொறுமை இழக்க வழியில்லை. ஆகவே, நடைமுறையில், அறிவு கொண்டு மட்டும் பழகாமல், முடிவெடுக்காமல், அன்புள்ளத்தோடு அனைத்தையும் அணுக வேண்டும். அப்போது புரியும் அன்பு பொறுமையுள்ளது என்பது. **- ஆர்.கே.**

# அருளாளரான திருத்தந்தை 6 ஆம் பால் புனிதராக உயர்த்தப்படுவார்




வத்திக்கான்- அருளாளரான திருத்தந்தை 6 ஆம் பால், புனிதராக உயர்த்தப்படுவார் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் மறைமாவட்ட அருள்தந்தையர்களிடம் கூறினார்.

தன் ஆண்டு தியானத்தைத் துவங்குவதற்கு முன்னதாக, வத்திக்கான் மறைமாவட்ட அருள்தந்தையர்களை, புனித ஜான் இலாத்தரன் பசிலிக்கா பேராலயத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனிதர்களான 23 ஆம் ஜான் மற்றும் 2 ஆம் ஜான் பால் ஆகியோரை தொடர்ந்து, அருளாளர் 6 ஆம் பால் அவர்களும் புனிதராக உயர்த்தப்படுவார் என்று கூறினார்.

வத்திக்கான் நகரின் ஆயர்களாகப் பணியாற்றிய அண்மைய திருத்தந்தையர்களில் பலர் புனிதர்களாக, அருளாளர்களாக, அல்லது வணக்கத்துக்குரியவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த வரிசையில், முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களும், தானும், 'காத்திருப்போர் பட்டியலில்' இருப்பதாகச் செபிக்கும்படியும், நகைச்சுவை உணர்வோடு கேட்டுக்-கொண்டார்.

கத்தோலிக்க திருஅவையின் தலைவர்களாக பணியாற்றியவர்களில், 80 க்கும் மேற்பட்ட திருத்தந்தையர், புனிதர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். அண்மையத் திருத்தந்தையர்களில் அருளாளரான 9 ஆம் பயஸ் புனிதராகவும், வணக்கத்திற்குரிய 12 ஆம் பயஸ் மற்றும் முதலாம் ஜான் பால் ஆகியோர் அருளாளராகவும் உயர்த்தப்படுவதற்கு முயற்சிகள் துவங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மெல்கித்திய முதுபெரும் தந்தையுடன் திருத்தந்தை பிரான்சிஸ் திருப்பலி




வத்திக்கான்- சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில், பிப்ரவரி செவ்வாய் காலை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்தியோக்கியாவின் கிரேக்க மெல்கித்திய முதுபெரும் தந்தை யூசோப் அப்சி அவர்களுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார். இத்திருப்பலியில் மறையுரை ஆற்றுவதற்குப் பதிலாக, கிரேக்க மெல்கித்திய திருஅவை பற்றிக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

நம் சகோதரர் முதுபெரும்தந்தை யூசோப் அவர்களுடன் இணைந்து நிறைவேற்றிய இத்திருப்பலி உலகளாவியத் திருஅவைக்குள், இலத்தீன் வழிபாட்டுமுறை மற்றும் கீழை வழிபாட்டுமுறை திருஅவைகளுக்கு இடையேயுள்ள திருத்தூது ஒன்றிப்பின் அடையாளமாக உள்ளது என்றும், முதுபெரும்தந்தை யூசோப் அவர்கள், மிகவும் தொன்மையான திருஅவையின் தந்தை என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். முதுபெரும்தந்தை யூசோப் அவர்கள், பேதுருவைத் தழுவ வந்துள்ளார், நான் பேதுருவோடு ஒன்றித்திருக்கிறேன் என்று சொல்ல வந்திருக்கின்றார் என்றும், திருநற்கருணைக் கொண்டாட்டத்திற்கு இது பொருள் உள்ளதாக அமைந்துள்ளது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

கிரேக்க மெல்கித்திய வழிபாட்டுமுறை திருஅவை, கத்தோலிக்க இறையியலுக்குள் தன் சொந்த இறையியல் மற்றும் தனது சிறப்பான திருவழிபாட்டுடன், ஒரு வளமையான திருஅவையாக விளங்குகின்றது என்றுரைத்த திருத்தந்தை, இக்காலத்தில் மெல்கித்திய மக்களில் பெரும் பகுதியினர் இயேசுவைப் போன்று சிலுவையில் அறையப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

கிரேக்க மெல்கித்திய திருஅவை மக்களுக்காகவும், மத்திய கிழக்கில் துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்காவும், நம் சகோதரர் முதுபெரும்தந்தை யூசோப் அவர்களுக்காகவும் இத்திருப்பலியை ஒப்புக்கொடுக்கப்படுகின்றது என்றும் திருத்தந்தை கூறினார்.

இத்திருப்பலியின் இறுதியில், முதுபெரும்தந்தை யூசோப் அவர்கள், திருத்தந்தைக்கு நன்றி கூறினார். திருத்தந்தையின் உடன்பிறந்த அன்பு மற்றும், அவர், கிரேக்க மெல்கித்திய திருஅவை மீது காட்டும் ஒருமைப்பாட்டுணர்வைப் பார்த்து உண்மையிலேயே நான் மனம் நெகிழ்ந்து போனேன் என்றும் திருத்தந்தைக்காகச் செபிப்பதாகவும்உறுதி கூறினார் முதுபெரும்தந்தை யூசோப் அவர்கள். இத்திருப்பலியில், மெல்கித்திய கிரேக்க ஆயர் பேரவை உறுப்பினர்களும் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நம்பிக்கையோடு பயணம் செய்வோம்

சில ஆண்டுகளுக்கு முன்பு தாய்லாந்தில் நடைபெற்ற “ஆசியாவில் நற்செய்தி அறிவிப்புப் பணி” எனும் மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்தேன். ஐந்து நாட்கள் நடைபெற்ற அம்மாநாட்டில் ஒவ்வொரு நாளும் குழு பகிர்வு நிச்சயம் இருக்கும். குழுவில் உள்ளவர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்வர். அவ்வாறு பகிர்ந்து கொண்டவர்களில் ஒருவரின் சாட்சியம் இது. இவர் ஸ்ரீலங்காவை சேர்ந்தவர்.

“ஒருநாள் எனது துறவர மதர் சுப்பேரியர் அவர்களை சந்தித்து, எனது தூரநோக்கு சிந்தனையை அவர்களிடம் தெரிவித்தேன். மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு எதுவுமே தெரியாத ஒரு நாட்டிற்கு என்னை அனுப்ப முடியுமா? என கேட்டேன். அவரும் இரண்டொரு நாளில் பதில் அளிப்பதாகச் சொல்லி, ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார்.

எனது வேண்டுகோளுக்கு இணங்க மங்கோலியா நாட்டிற்குச் சென்று ஊழியம் புரிய அனுமதிக்கப்பட்டது. மொழி தெரியாத நாட்டில் என்ன செய்யப்போகிறாய் என இயேசுவின் மேல் பாரத்தை போட்டு அவரில் நம்பிக்கையுடன் செல்ல துணிந்துள்ளேன். அவருக்காக செல்லும் என்னை கைவிடமாட்டார். முழு நம்பிக்கை உள்ளது என துணிந்து உற்சாகத்துடன் கூறினேன். உடன் இருந்தோரும் ஊக்கத்துடன் வழி அனுப்பி வைத்தனர்.

சுமார் மூன்று வருடங்கள் ஓடி விட்டன. நானும் இதோ இருக்கும் ஆப்பிரிக்க சகோதரருதான் அங்கு ஊழியம் செய்கிறோம். பல வழிகளில் அங்கும் மக்களுக்கு செயல் வடிவில் அன்பு செலுத்தி அக்கறை கொண்டு பணி செய்கிறோம். இயேசுவை நம்பி சென்றேன். அவர் ஒருவரே உலகின் மீட்பர் என சொல்லாலும், செயலாலும் அவர்களுக்கு அறிவித்து நம்மை நல் வழியில் செல்ல இயேசுவின் அழைப்புக்கு செவிமடுப்போம் என்று சொல்லி, அவர் தண்டிக்கும் கடவுள், அல்ல நம்மை திருத்தும் கடவுள் எனச் சொல்லி இன்றும் அங்குதான் பணி செய்கிறேன்” என சொல்லி முடித்தார்.

ஆம், அவர் கூறின தண்டிக்கும் கடவுள் அல்ல. மாறாக நம் தவறான வாழ்வின் பாதையை செம்மைப் படுத்தி நல்வழிக்கு அழைத்து செல்லும் இந்தத் தவசு கால சிந்தனையில் ஆண்டவரின் அன்பை உணரும் காலமான இக்காலத்தில் ஒளியின் மக்களாக வாழ, நிலைவாழ்வு பெற்ற மக்களாக திகழவும் சிந்திக்க வைக்கும் வாரம்.

இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுவதுபோல் “ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு; நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து வழியாகப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்” எனும் வசனத்தையும் சிந்தித்துப் பார்த்து பதில் தரும் மக்களாக செயல்படுவோம். முதல் வாசகத்தில், “கடவுளாம் ஆண்டவர் உங்களோடு இருப்பாராக” எனும் ஊக்கம் கொடுக்கும் இறைவார்த்தையையும் மனதில் கொள்வோம். நம்பிக்கையோடு தவசுகாலத்தில் பயணம் செய்வோம். **- ஆ.வி.டேவிட்**

## தவக்காலம் 4 ஆம் ஞாயிறு

**2குறி: 36:14-16, 19-23**
**திபா: 137: 1-2, 3, 4-5, 6**
**எபே.: 2:4-10**
**யோவான்: 3: 14-21**

**கவனத்திற்கு**

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் வாசகம்: ஆண்டு 2**
**திருபுகழ் மாலை - 2**